தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 03.08.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4843/F/2024**

திரு.கார்த்திக் கண்ணா, -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

******

**இறுதி ஆணை**

இவ்வாணையம் 12.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் 17.06.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு தகவல்கள் ந.க.எண்.13110/2026/TCP5/RTI(1), நாள் 18.06.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் Tracking Consignment-ன் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் உத்தரவில் தெரிவித்துள்ளவாறு, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார கால அவகாசம் கோரினார். அதனை ஆணையம் பரிசீலனை செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கால அவகாசம் வழங்கி, விளக்கத்தினை 01.07.2026 அன்று பொதுத்தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்கள் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

2. அதனை தொடர்ந்து 01.07.2026 அன்று பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல்

அலுவலர், திருமதி.ப.வள்ளியம்மாள், (தற்போது மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு ஆணையரகம், 2, 3, (ம) 4வது தளம், E&C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை-600 107) ஆகியோர்கள் ஆஜராகி ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் 20.05.2024 தேதியிட்ட மனு 24.05.2024 அன்று அலுவலகத்தில் பெறப்பட்டு, கடிதத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி, அளவர்/ உதவி வரைவாளர் அவர்களுக்கு 24.05.2024 அன்று அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து 04.07.2024 நாளிட்ட மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு கடிதம் மீண்டும் பெறப்பட்டதாகவும், அதன் மீது நடவடிக்கை மேற்கொண்டு 01.08.2024-ல் பொதுத் தகவல் அலுவலரால் பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து, காலதாமதத்திற்கு வருத்தம் தெரிவித்து, இனி வரும் காலங்களில் காலதாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்வதாக ஆணையத்தின் முன் தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை. எனவே ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கவில்லை. மேலும், மனுதாரரின் 20.05.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காததற்காக பொது அதிகார அமைப்பானது மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் இழப்பீட்டு தொகையாக ரூ.5,000/-யினை (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வங்கி வரைவோலையாக மனுதாரருக்கு வழங்கிவிட்டு, அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை ரசீதையும் இணைத்து, ஒரு அறிக்கையாக தயாரித்து 04.08.2026 அன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திருமதி.ப.வள்ளியம்மாள், (தற்போது மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு ஆணையரகம், 2, 3, (ம) 4வது தளம், E&C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை-600 107) ஆகியோர்கள் 04.08.2026 அன்று அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பதிலாக 03.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்), யினை வங்கி வரைவோலையாக மனுதாரருக்கு வழங்கப்பட்டதற்கான வங்கி வரைவோலையின் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து, இப்புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4843/F/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திட்ட உதவியாளர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

Thiru.Karthik kanna,
84-N 3A Cross 4th Main,
Hal III Stage New Thipaassandra,
Bangaluru-560 075.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-